DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, PANRUTI.

C C No. 178/2015

Deposition of Witness : LW1 /PW1

| | | | |
|---|---|---|---|
| Name | மீனா | Taluk | |
| Husband's Name | லஷ்மிகாந்த் | Caste | |
| Village | | Calling | |
| Age | | Religion | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of 11.08.2023 | | | |

(A1, A3, A5 absent. Petition filed and allowed. A2, A4, A6 Present.)

சாட்சி புதுப்பேட்டை காவல் நிலைய முதல் நிலை காவலர் திரு.ப. கஜேந்திரன் (Gr.I 2534) அவர்கள் அடையாளம் காட்டினார்.

**முதல் விசாரணை-**

1. நான் தற்போது கரும்பூர் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். பட்டியல் சாட்சி-2 லஷ்மிகாந்த் எனது கணவர். பட்டியல் சாட்சி -3 அண்ணாமலை எனது அப்பா. பட்டியல் சாட்சி-4 பாசமலர் எனது அண்ணன் மகள். பட்டியல் சாட்சி-5 முத்துலட்சு எனது அண்ணி. பட்டியல் சாட்சி- 6 பெருமாள் எனது அக்கா கணவர். பட்டியல் சாட்சி-7 ஐய்யனார் எனக்கு மாமா முறை. பட்டியல் சாட்சி-8 வீரம்பாள் எனது அம்மா. வழக்கின் எதிரிகளை தெரியும்.

2. நான் வழக்கு சம்பவத்தின்போது கரும்பூர் காலனி புதுமனை முதல் தெருவில் வசித்து வந்தேன். கடந்த 16.01.2014 அன்று இரவு 07.30 மணயளவில் நானும், எனது அப்பா அண்ணாமலை, தங்கைகள் கலைச்செல்வி, சுபாஷினி ஆகியோர்கள் வீட்டில் இருந்தோம். அப்போது இளவரசன், இளவழகன், இளையராஜா, சிவராமன், சிவசங்கர், சாந்தாமணி, வீரப்பன், பிரபாகரன், இளஞ்சேழியன் ஆகியோர்கள் அத்துமீறி எங்கள் வீட்டிற்குள் நுழைந்து தேவடியா பையா, தேவடியா மவனே என்று என் அப்பாவை அசிங்மாக திட்டி உங்கள் வகையறாவை சேர்ந்தவர்களை யாரையும் சாமி தூக்க விடமாட்டோம் என்று எனது அப்பாவை அவரது மார்பில் இளவரசன், சிவசங்கர், சிவராமன், இளஞ்சேழியன் ஆகியோர்கள் எட்டி உதைத்தார்கள். அதில் எனது அப்பா மயக்கமாகி கீழே விழுந்துவிட்டார். அப்போது நானும், எனது அம்மா, சத்தம்போட்டோம். அங்கள் சத்தம்கேட்டு வெளியில் இருந்து எனது கணவர் லஷ்மிகாந்த் வந்து மறித்தார். அப்போது அவரை அசிங்கமாக திட்டி உன்னைதான் எதிர்பார்த்தோம் என்று சிவராமன் கத்தியால் தலையில் முன் பகுதி, பின் பகுதியில் வெட்டினார். மறித்த என்னையும் இளஞ்சேழியன் கம்பியால் எனது பின் பக்க தலையில் அடித்தார். இளையராஜா கத்தியால் எனது அண்ணன் மகள் பாசமலரை கத்தியல் தலையின் இடது பக்கத்தில் குத்தினார். எனது அம்மாவை தேவடியா, வள்ளார ஓழி என்று வீரப்பன், இளையராஜா ஆகியோர்கள் அசிங்கமாக திட்டினார்கள். மேற்படி சண்டையை பார்த்த எனது அக்கா கணவர்

பெருமாள், மாமா ஐய்யனார் , எனது மைத்துனர் ராஜா ஆகியோர்கள் விலக்கிவிட்டார்கள். மேற்சொன்ன எதிரிகள் அனைவரும் எங்களை பார்த்து இப்போது உங்களைவிட்டுவிட்டோம் என்று நினைக்காதிர்கள் உங்களை கொல்லாமல் விடமாட்டோம் என்று கொலை மிரட்டல் விடுத்தார்கள். எங்களை பண்ருட்டி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக மேற்சொன்ன ஐய்யனார், ராஜா, பெருமாள் ஆகியோர்கள் அழைத்து சென்றார்கள். என் கணவர் மிக மோசமான நிலையில் இருந்ததால் அவரை பாண்டி ஜிப்மர் மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது அங்கு வந்து என்னை விசாரித்த புதுப்பேட்டை காவல் நிலைய போலிசாரிடம் சம்பவம் மேற்சொன்ன எதிரிகள் எங்களை அசிங்கமாக திட்டி தாக்கியது பற்றி சொல்லி அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு புகார் வாக்குமூலம் அளித்தேன். தற்போது என்னிடம் காட்டப்பட்ட புகார் வாக்குமூலத்தில் உள்ள அம்சங்கள் எனக்கு தெரியும். **மேற்படி புகார் வாக்குமூலம் அ.சா.அ.1/அ.சா.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலிசார் என்னை வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள்.

(அரசு தரப்பில் கு.வி.மு.ச. பிரிவு 319-ன் கீழ் மனு தாக்கல் செய்ய வேண்டுமென கோரியதால் அ.சா.1 ன் சாட்சியம் ஒத்திவைக்கப்படுகிறது)